**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**
**C.C.No. 796/2025**
**U/s. 294(b),352 ,506(ii)IPC**
**PROSECUTION WITNESS NO. 1 (LW. 1)**

| | |
|---|---|
| **Name** : சீனிவாசன் | |
| **Father's/Husband Name :** | **Occupation :** |
| **Address :** | **Age : /2026** |

எதிரி ஆஜர்.

**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி. ரேணுகா, நகல் ஆய்வாளர். செல்வி, வி, சௌந்தர்யா , தட்டச்சர்.**

<u>C.C.No. 796/2025 12.06.2026</u> **விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 11.29 FN**

<u>முதல் விசாரணை:</u>

நான் தஞ்சாவூர் கொடிமரத்து மூலை பகுதியில் குடியிருந்து கூலிவேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. எனக்கு வலிப்பு நோய் உள்ளது . அதனால் என்ன நடந்தது என்று தெரியாது. என்னிடம் காட்டப்படும் புகாரிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். **அந்த கையெழுத்து அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது. சாட்சியை மேற்கு காவல் நிலைய தலைமை காவலர் 2376 திருமதி. மோகனசுந்தரி அவர்கள், நீதிமன்றத்தில் அடையாளம் காண்பித்தார்.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :**

கடந்த 02.03.2024 ம் தேதி மாலை 5.00மணியளவில் AYA நாடார் சாலை அருகிலுள்ள சந்தோஷ் தேநீர் கடையில் , தேநீர் சாப்பிட்டு கொண்டிருந்ததாகவும், அப்போது ஊத்துகுளி மணி என்பவருக்கும் எனக்கும், கடந்த ஒரு மாதத்திற்கு முன்பாக வாக்குவாதம் ஏற்பட்டதாகவும், அந்த முன்விரோதம் காரணமாக தேநீர் சாப்பிட்டு கொண்டிருந்த என்னிடம் ஊத்துகுளி மணி மற்றும் அப்துல் கலாம் , பெயர் தெரியாத அடையாளம் தெரிந்த இரண்டு நபர்கள் அங்கு வந்ததாகவும் என்னை பார்த்து எதிரி ஊத்துகுளி மணி என்பவர் என்னை அருவருக்கதக்க வார்த்தையால் திட்டி வீண் வம்பு இழுத்தாகவும், அப்போது மரியாதையாக பேச வேண்டும்என்று வீண் வம்பு இழுக்க வேண்டாம் என்று சொன்னதாகவும், அப்போது எதிரி ஊத்துகுளி மணி உனக்கு என்னடா மரியாதை என்று கேட்டு எனது இடது கண்ணிலும், காதிலும் கையால் அடித்தாகவும் உடனே அப்துல்கலாம் மற்றும் அவருடன் வந்த அடையாளம் தெரிந்த இரண்டு நபர்கள் என்னை முதுகிலும் அருவருக்கதக்க வார்த்தையால் திட்டி கொண்டே கையால் அடித்தாகவும் ஊத்துகுளி மணி அருகிலிருந்த கட்டையை எடுதது உன்னை

கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டி விட்டு நான்கு நபர்கள் ஓடிவிட்டதாகவும் எனக்கு காயம் இல்லலாததால் நான் மருத்துவமனைக்கு செல்லவில்லை எனவும் காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தாகவும், போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்சமயம் எதிரிக்கு பயந்து எதிரிக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் பிறழ் சாட்சியாக மாறி சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை : இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

**ஒப்பம்** - S.T. **கனிமொழி**,
நீதித்துறை நடுவர் எண்–I,
தஞ்சாவூர்.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**
**C.C.No. 796/2025**
**U/s. 294(b),352 ,506(ii)IPC**
**PROSECUTION WITNESS NO. 2 (LW. 2)**

| | |
|---|---|
| **Name** : சிவா | |
| **Father's/Husband Name :** | **Occupation :** |
| **Address :** | **Age : /2026** |

எதிரி ஆஜர்.

**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி. ரேணுகா, நகல் ஆய்வாளர். செல்வி, வி, சௌந்தர்யா , தட்டச்சர்.**

**<u>C.C.No. 796/2025 12.06.2026</u> விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 11.49 FN**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தஞ்சாவூர் வடக்குவாசல் சிரேஸ் சத்திரம் ரோட்டில் குடியிருந்து ட்ரம் செட் நிகழ்ச்சி நடத்தி வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. அசா1 சீனிவாசனை தெரியும். அசா1 க்கு என்ன ஏற்பட்டது என்று தெரியாது. இவ்வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது. சாட்சியை மேற்கு காவல் நிலைய தலைமை காவலர் 2376 திருமதி. மோகனசுந்தரி அவர்கள், நீதிமன்றத்தில் அடையாளம் காண்பித்தார்.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :**

கடந்த 02.03.2024 ம் தேதி மாலை 5.00மணியளவில் AYA நாடார் சாலை அருகிலுள்ள சந்தோஷ் தேநீர் கடையில் அசா1 தேநீர் சாப்பிட்டு கொண்டிருந்ததாகவும், அப்போது ஊத்துகுளி மணி என்பவருக்கும் அசா1ற்கும், கடந்த ஒரு மாதத்திற்கு முன்பாக வாக்குவாதம் ஏற்பட்டதாகவும், அந்த முன்விரோதம் காரணமாக தேநீர் சாப்பிட்டு கொண்டிருந்த அசா1யிடம் ஊத்துகுளி மணி மற்றும் அப்துல் கலாம் , பெயர் தெரியாத அடையாளம் தெரிந்த இரண்டு நபர்கள் அங்கு வந்ததாகவும் அசா1 யை பார்த்து எதிரி ஊத்துகுளி மணி என்பவர் அசா1 யை அருவருக்கதக்க வார்த்தையால் திட்டி வீண் வம்பு இழுத்தாகவும், அப்போது மரியாதையாக பேச வேண்டும்என்று வீண் வம்பு இழுக்க வேண்டாம் என்று சொன்னதாகவும், அப்போது எதிரி ஊத்துகுளி மணி அசா1யிடம் என்னடா மரியாதை என்று கேட்டு அசா1ன் இடது கண்ணிலும், காதிலும் கையால் அடித்தாகவும் உடனே அப்துல்கலாம் மற்றும் அவருடன் வந்த அடையாளம் தெரிந்த இரண்டு நபர்கள் அசா1ன் முதுகில் அடித்தாகவும், அருவருக்கதக்க வார்த்தையால் திட்டி கொண்டே கையால் அடித்தாகவும் ஊத்துகுளி மணி அருகிலிருந்த கட்டையை எடுதது அசா1யை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டி விட்டு

நான்கு நபர்கள் ஓடிவிட்டதாகவும் அசா1ற்கு காயம் இல்லலாததால் அசா1 மருத்துவமனைக்கு செல்லவில்லை எனவும் காவல் நிலையத்திற்கு சென்று அசா1 புகார் கொடுத்தாகவும், போலீசார் விசாரணையில் சம்பவத்தை நேரில் பார்த்தாகவும் கண்ணுற்ற சாட்சியாக கூறிவிட்டு தற்சமயம் எதிரிக்கு பயந்து எதிரிக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் பிறழ் சாட்சியாக மாறி சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை : இல்லை.</u>**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

**ஒப்பம்** - S.T. **கனிமொழி**,
நீதித்துறை நடுவர் எண்–I,
தஞ்சாவூர்.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**
**C.C.No. 796/2025**
**U/s. 294(b),352 ,506(ii)IPC**
**PROSECUTION WITNESS NO. 3 (Additional Witness No.1)**

| | |
|---|---|
| **Name :** | |
| **Father's/Husband Name :** | **Occupation :** |
| **Address :** | **Age : /2026** |

எதிரி ஆஜர்.

**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி. ரேணுகா, நகல் ஆய்வாளர். செல்வி, வி, சௌந்தர்யா , தட்டச்சர்.**

**C.C.No. 796/2025 12.06.2026 விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 11.59FN**

**முதல் விசாரணை:**

**1.** நான் தஞ்சாவூர் நகர மேற்கு காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் விசாரணை அதிகாரிகளான திரு. வேலாயுதம் உதவி ஆய்வாளர் ஓய்வு பெற்றுவிட்டதாலும், உதவி ஆய்வாளர் திரு. மாரியப்பன் வேறு அலுவல் பணியில் உள்ளதால் நீதிமன்றத்திற்கு வர இயலவில்லை. அவர்கள் கையெழுத்து நன்றாக தெரியும் என்பதால் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 02.03.2022 ம் தேதி 21.00 மணிக்கு உதவி ஆய்வாளர் திரு. மாரியப்பன் நிலைய பொறுப்பிலிருந்தபோது நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று நிலைய மனு எண் 167/2024 பதிவு செய்யப்பட்டு , விசாரணைக்கு பின்னர் 03.03.2024 மணிக்கு மேற்படி மனுவை பார்வையிட்டு அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.223/2024 சபி. 294(b), 352, 506(ii) இதசவின் படி வழக்கு பதிவு செய்துள்ளார். பின்பு அசல் புகார் மனுவையும், முதல் தகல் அறிக்கையும், கனம் குற்றவியல் நடுவர் நீதித்துறை எண் 1 அவர்களுக்கு அனுப்பி வைத்தும், வழக்கின் மற்றொரு நகலை சம்மந்தப்பட்ட காவல் உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகலை உதவி ஆய்வாளர் பார்வைக்கு வைத்தார். **புகார் அசாஆ 2 , முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

2. பின்பு வழக்கினை தனது புலன் விசாரணைக்கு எடுத்து கொண்ட உதவி ஆய்வாளர் திரு. வேலாயுதம் அவர்கள், கடந்த 03.03.2024 ம் தேதி15.00 மணியளவில் சம்பவயிடம் சென்று அங்குள்ள சாட்சிகள் மணிகண்டன், தனுஷ் ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **பார்வை மகஜர் அ.சா.ஆ. 4, மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 5**

**ஆகும்**. பின்பு மகஜர் சாட்சிகள் மற்றும் இதர பட்டியல் சாட்சிகள் 1–2 விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

3. பின்பு சாட்சிகளை விசாரணை செய்ததிலிருந்து உண்மை என தெரிய வந்ததால் வழக்கின் எதிரிகளை தேடி சென்றபோது உண்மை என தெரியவந்தால் எதிரி மணிகண்டன் தஞ்சாவூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் Crlmp No. 1961/2024, 12.03.2024 ல் முன் ஜாமீனில் சென்றுள்ளதால் கைது செய்யபடவில்லை. இவ்வழக்கின் இளம்பிழையாளியான அப்துல் கலாம் என்பவரை இளம் சிறார் நீதிமன்றத்தில் காவலுக்கு உட்படுத்தியுள்ளார்.

4 . பின்பு உதவி ஆய்வாளர் அவர்கள்சாட்சிகளின் வாக்குமூலங்களின் இருந்தும், அவரது புலன் விசாரணையிலிருந்தும் சம்பவம் நடந்தது உண்மை என தெரியவந்ததால் இவ்வழக்கின் இளம்பிழையாளி அப்துல்கலாம் மீது தஞ்சாவூர் இளம்சிறார் குழும நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு, இவ்வழக்கின் எதிரியான மணிகண்டன் மீது மேற்படி இதச பிரிவுகளின் படி 14.03.2024 ம் தேதி குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும், சம்பவயிடத்தில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு. சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

**ஒப்பம்** - S.T. **கனிமொழி**,
நீதித்துறை நடுவர் எண்–I,
தஞ்சாவூர்.